<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 69/2024</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.7</u>

<u>Accused present</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சக்திபாலன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 25th day of February, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இராஜபாளையம் மாலையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெயின்டராக பணி செய்து வருகிறேன். சாட்சி வைரவன் என்பவரை எனக்குத் தெரியும், அவர் எங்களுடன் பெயின்டிங் வேலைக்கு வருவார். அவர் எங்கள் தெருவிற்கு அருகாமையில் உள்ள அம்பேத்கார் நகரை சேர்ந்தவர்.

கடந்த 23.07.2023 ம் தேதி இராயப்பன் என்பவரை டிவியை தூக்கிப்போட்டு கொலை செய்து கிடப்பதாக கேள்விப்பட்டு இந்திரா நகர் முக்கில் அமைந்துள்ள டிவி கடைக்கு அருகில் சென்றோம். அப்போது வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் டார்ச் லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு இரத்தக்கறை படிந்த மண், இரத்தக்கறை படியாத மண், ஆரஞ்சு கலர் கட்டம்போட்ட வெள்ளை முழுக்கை சட்டை, டிவி உடைந்த பாகங்கள், இரத்தக்கறை படிந்த கண்ணாடிதுண்டுகள் ஆகியவற்றை அத்தாட்சியின் பேரில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்

மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும் சாட்சி வைரவனும் கையொப்பம் செய்தோம். எங்கள் முன்னிலையில் தயார் செய்த **பார்வை மகஜர் அசாஆ 10 ஆகும். அத்தாட்சி அசாஆ 11** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

இறந்துபோன ராயப்பன் எனக்கு என்ன உறவு என்றால் உறவு முறை கிடையாது. இறந்துபோன ராயப்பன் என்பவரின் ஊரும் எனது ஊரும் வேறு வேறு என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரத்தை நான் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

சம்பவ இடத்தில் நான் சென்றபோது அங்கு நிறைய பேர் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். ராயப்பனின் தம்பி வர்னிஷ் என்பவர் என்னுடன் தான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளார் என்றால் சரிதான். ராயப்பன் எனது உறவினர் என்பதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் போலிசார் விசாரணையில் சொன்னது போன்று என்னால் சாட்சி சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் ராயப்பனின் தம்பி வர்னிஷ் காவல் நிலையம் அழைத்து சென்று கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.8

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வர்கேஷ் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 25th day of February, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது வத்ராப்பில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோனவர் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். எனது அண்ணன் பெயர் ராயப்பன். அவர் இராஜபாளையம் பச்சைக்காலனியில் குடும்பத்துடன் வசித்து வந்தார். எனது அண்ணனுக்கு அதிகமாக குடிப்பழக்கம் உண்டு. அதன் காரணமாக எனது அண்ணனுக்கும் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். எனது அண்ணன் சென்டரிங் பணி செய்து வந்தார். எனது அண்ணன் பலபேருடன் சேர்ந்து குடிப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.

தேதி சரியாக ஞாபகம் இல்லை. சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அதிகாலை 3.00 மணியளவில் எனது அண்ணன் மனைவி எனக்கு தொலைபேசியில் அழைத்து சண்டையில் எனது அண்ணனை யாரோ கொலைசெய்துவிட்டதாகவும், அரசு மருத்துவமனையில் வைத்திருப்பதாகவும் கூறினார். நான் இராஜபாளையம் மருத்துவமனை வந்தவுடன் அங்கு இருந்த சித்திரை முத்து என்பவரிடம் என்ன நடந்தது என்று விசாரித்தேன். அவர் முதல் நாள் இரவு

கார்த்தீஸ்வரன் என்பவரும் எனது அண்ணனும் ஒன்றாக மது அருந்திக்கொண்டிருந்தபோது இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும், அப்போது பழைய டிவி கடைக்கு முன்பு இருந்த பழைய டிவியை எனது அண்ணன் தலையில் கார்த்தீஸ்வரன் போட்டு கொலை செய்துவிட்டதாகவும் கூறினார்.

அதன்பின்னர் அரசு மருத்துவமனையில் வைத்து ஆய்வாளர் எனது அண்ணன் பிரேததத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபோது நான் சாட்சியாக உடன் இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்தவுடன் சொந்த ஊரில் எனது அண்ணனை அடக்கம் செய்யும் பொருட்டு பிரேதத்தை நான் பெற்றுக்கொண்டு வத்றாப்பில் அடக்கம் செய்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சித்திரை முத்து என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு உறவு கிடையாது. எனது அண்ணனுடன் இருப்பார். இறந்துபோன ராயப்பனை சித்திரை முத்து சித்தப்பா என்று உறவுமுறை கூறுவார் என்று சொன்னால் தவறு. நான் இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சித்திரை முத்துவிடம் அஙகு வைத்து நான் விசாரிக்கவில்லை என்றாலும் அவர் என்னிடம் எந்த விபரமும் கூறவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் இறந்துபோனவர் எனது அண்ணன் என்பதால் கார்த்தீஸ்வரனுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.